# ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

(ரேஷனாலிஸ்ட் ரிக்ரியேஷன் கிளப், கோடம்பாக்கம்.)

சென்னை, அக். 23.

ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம் ஒன்று மேற்கண்ட கிளப்பின் ஆதரவில், கோடம்பாக்கத்தைச் சேர்ந்த வரதராஜ பேட்டைக்கு அருகிலுள்ள சுபேதார் தோட்டத்தில் (கோடம்பாக்கம் ஹரிஜன கைத்தொழிற்சாலைக்கு எதிரில்) ஞாயிற்றுக்கிழமை (24-10-37) மாலை 4-30 மணிக்குத் தோழர் வித்வான் மறை. திருநாவுக்கரசு அவர்களின் தலைமையில் நடைபெறும்.

அதுசமயம் தோழர்கள் பண்டிதர் டி. எல். திருஞானசம்பந்தம், பண்டிதர் எல். ராமசாமி பண்டிதர் கே. எம். சின்னப்பா பிள்ளை, எஸ். ரங்கநாதன், கே. எம. பாலசுப்ரமணியம், பி. எ. பி. எல் கே. கலியாணசுந்தரம் முதலியவர்கள் பேசுவார்களென தோழர் வெங்கிடாசலம் அறிவிக்கிறார்.

---

சூரியன் மற்ற நாடுகளில் தோன்றுவதைவிட, அளவில் பதின் மடங்கு அதிகமாய் இந்தியாவில் பிரகாசிக்கிறதாம்.

---

சுமார் 2000 வருடங்களுக்கு முன், இந்தியாவை 'நவநந்தனர்' களென்று ஒன்பது அரசர்கள் ஆண்டார்களாம்.